பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (19.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 24

### அன்ரன் பாலசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

## நாளை துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புகள் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை துக்கதினம் அனுஷ்டிக்கும்படி யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கோரியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக கடந்த மூன்று தசாப்தமாக குரல் கொடுத்த 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்கு எமது கண்ணீர் வணக்கங்களைத் தெரிவிக்கும் முகமாக நாளை புதன்கிழமையன்று யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் பூரண துக்கதினமாக கடைப்பிடிப்போம்.

இதனூடாக எமது அஞ்சலிகளை எமக்காக உழைத்த கல்விமானும், தத்துவாசிரியரும், தமிழ் பேசும் மக்களின் விடுதலை விரும்பியுமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு செலுத்துவோம்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சுத்திறனும், அரசியல் ராஜதந்திரமும்,

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் பாதிக்கப்படுவதை தடுப்பது தமிழகத்தின் பொறுப்பு

### அதிலிருந்து விலகமாட்டோம் என்கிறார் கருணாநிதி



''சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வழித்தோன்றல்களான ஈழத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து, அவர்களைப் பாதுகாப்பது தமிழகத்தின் பொறுப்பு. அதிலிருந்து நாம் விலகமாட்டோம்'' - இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழக முதல்வர் மு. கருணாநிதி.

நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசும்போதே கருணாநிதி இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

''இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலைகள் நிறுத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு (06ஆம் பக்கம் பார்க்க)

### மஹிந்த - ரணில் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது

கொழும்பு, டிசெ.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு இன்னும் சில தினங்களில் இடம்பெறும் என ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கவிஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிய ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து, தனது விஜயம் தொடர்பாக எடுத்து விளக்க ஏற்பாடாகியிருந்தது.

ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமாலை இடம்பெற்றது என்றும் -

அதன் காரணமாக ஜனாதிபதியுடனான சந்திப்பு பிற்போடப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ரணிலுக்கு பூரண அதிகாரம் வழங்கும் முடிவை செயற்குழு நேற்று எடுத்ததாக கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன்.

(அ-1)

# மலையகத் தொழிலாளருக்கு ஆதரவாக நாடு முழுவதும் வேலை நிறுத்தப் போர்!

### அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிச. 19

**தோட்டத் தொழிலாளரின் சம்பளப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணும்படி ஜே.வி.பி., ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. தவறும் பட்சத்தில் நாடு முழுவதும் அரச, தனியார் துறைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் வேலை நிறுத்தப் போராட் டமொன்றை நடத்தப்போவதாக அக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஜே.வி.பியின் கீழ் இயங்கும் 131 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஜே.வி.பி. தொழிற்சங்கங்களுக்குப் பொறுப்பான கே.டி. லால்காந்த ஆகியோருடன் நேற்றுக் காலை இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் எஸ். சதாசிவம் பேச்சு நடத்தினார்.

தோட்டத் தொழிலாளரின் சம்பளப் போராட்டம் நியாயமானது. இப் போராட்டத்தைத் தோட்ட முதலாளி மார் சம்மேளனம் சில தொழிற்சங்கங்களுடன் இணைந்து

(06ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் புலிகளை விரட்ட முயன்றால் படைகள் மீது முன்கூட்டியே தாக்குதல்!

### எல்லா வழிகளிலும் எதிர்ச்சமர் நடக்கும் என்கிறார் பேச்சாளர் இளந்திரையன்



கொழும்பு, டிசெ.19

''கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டுவதற்கு அரசுப்படைகள் திட்டம் தீட்டினால் விடுதலைப் புலிகள் அதற்கு முன்பாகவே அரசுப்படைகள் மீது தாக்குதல் தொடுப்பர்.''

புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் இவ்வாறு எச்சரித்திருக்கிறார். கிளிநொச்சியிலிருந்து 'றொய்டர்' செய்தி நிறுவனத்துக்கு அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கிலிருந்து புலிகளை விரட்டுவதாகக் கூறும் திட்டத்தின் மூலம் விரட்டப்படப் போவது புலிகள் அல்லர். ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் அனைவருமே. - என்றும் இளந்திரையன் கூறியிருக்கின்றார்.

''இராணுவத்தினரின் மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாகத்தான் வாகரையிலிருந்து பொதுமக்கள் வெளியேறி வருகின்றனர். எறிகணை மற்றும் வான் தாக்குதல்கள் பல, அகதி முகாம்களைத் தாக்கியதில் பொது மக்கள் பெருமளவிலானோர் உயிரிழந்துள்ளனர்.

பொது மக்களை நாங்கள் கட்டாயப்படுத்தி அவர்களைப் பிடித்து வைக்கவில்லை. அப்பகுதியைச் சேர்ந்த சிலரும் விடுதலைப் புலிகள், பொது மக்களைப் பிடித்து வைக்கவில்லை என்றே சாட்சி கூறியுள்ளனர்.

வாகரையில் தொடரும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களால் இதுவரை 17,000 இற்கும் அதிகமான பொது மக்கள் அப்பகுதி

(06ஆம் பக்கம் பார்க்க)

### செங்கலடியில் மூவர் சுட்டுக் கொலை!

கொழும்பு, டிச. 19

மட்டக்களப்பு - செங்கலடி பஸ் தரிப்பிடத்தில் வைத்து கருணா அணியைச் சேர்ந்த மூவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனரென ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செங்கலடியிலுள்ள தமது அலுவலகத்திலிருந்து ஆவணம் ஒன்றைப் பிரதியெடுப்பதற்காக வந்த இவர்கள் மூவரையும் சாரம் அணிந்துவந்த ஒருவர் சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்றும் -

(06ஆம் பக்கம் பார்க்க)

## பனிக்கட்டி விபத்தில் சிக்கி தமிழ்ச் சிறுவர் இருவர் பலி

### கனடா ஸ்காபரோவில் சம்பவம்

ஸ்காபரோ, டிசெ.19

கனடா, ஸ்காபரோ வடகிழக்கில் உள்ள குளம் ஒன்றில் பனிக்கட்டியில் சறுக்கி விழுந்து விபத்துக்குள்ளான இரண்டு இலங்கைத் தமிழ்ச்சிறுவர்கள் மரணமானார்கள்.

இம்மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் பனிக்கட்டிகளுக்குள் சிக்கிய இரண்டு சிறுவர்களில் ஒருவரான பிருந்தன் முரளிதரன் (வயது 11) அன்றைய தினமே உயிரிழந்தார்.

அவர்கள் இருவரையும் காப்பாற்றுவதற்கு நகரவாசிகள், பொலிஸார், தீயணைப்புப்படையினர் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் (06ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்குப் பல்கலையில் பணிகள் ஸ்தம்பிதம்!

கொழும்பு, டிசெ.19

கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல் போனதையடுத்து கிழக்குப் பல்கலைக்கழகப் பணிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந் துள்ளன. துணைவேந்தர் காணாமல் போனமை தொடர்பாக 2 விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். தற்போது துணைவேந்தரின் வாகனச் சாரதி விசாரணைக்கு உட்படுத்தப்

(06ஆம் பக்கம் பார்க்க)

### கல்முனையில் சார்ஜண்ட் மரணம்

கல்முனை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும், பொலிஸ் சார்ஜண்ட் எம்.ஐ.முகம்மது காஸிம் (வயது-43) நேற்றுக்காலை 10.30மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் நிலைய விடுதியில் இவர் இறந்துகிடந்தமை சில மணி நேரங்களின் பின்னர் தெரியவந்தது. மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் சாய்ந்தமருதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தன்னைதத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவரின் மரணம் குறித்து கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான புதிய விதிகளினால் மக்களுக்குப் பாதிப்பு!

### திருத்தம் செய்யக் கோருசிறது சர்வதேச சட்டவியலாளர் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 19

பயங்கரவாதத் தடையின் பொருட்டு அண்மையில் கொண்டுவரப்பட்ட புதிய சட்ட விதிகளினால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை உள்ளது. இதனால் அந்தச் சட்ட [illegible] மாறு சர்வதேச சட்ட வியலாளர்கள் ஆணைக்குழு, இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

அமைதியானதும், சட்ட எல்லைக்குட்பட்டதுமான செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் திருத்தத்தைக் கொண்டுவருமாறு ஆணைக்குழு கேட்டுள்ளது.

[illegible] அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு புதிய சட்ட விதியினால் இடையூறு ஏற்படலாம் என்று சர்வதேச சட்டவியலாளர்கள் ஆணைக்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டவிதியை மீள்பரிசீலனை செய்யுமாறும் ஆணைக்குழு அந்த அறிக்கை

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு

மண்ணில் 04 ✱ 10 ✱ 1973



விண்ணில் 30 ✱ 12 ✱ 2005

அமரர் **தர்மலிங்கம் தவலிங்கம்**

(முன்னாள் கிளை முகாமையாளர், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்)

கூட்டுறவில்
ஓர் சிறகு பிரிந்ததனால்
இன்றும் உன் நினைவால்
தவிக்கிறது எம் சமூகம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்.

(சி.51597)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை செல்வநாயகம் T.S.S.

(ராஜகோபால் புடவைக்கடை கணக்காளர்)



உயரப்புலம், ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை - அருளம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும் வரப்பிரகாசம் - மேரியோசப் தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தம்மாவின் பாசமிகு கணவரும் அமிர்தசொருபன் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), அமிர்தசெல்வன், (ஜெயந்தி புடவை யகம்) அமிர்தநிறஞ்சன் (ஜனசக்தி இன்சூரன்ஸ்- யாழ்ப்பாணம்) மற்றும் காலஞ்சென்ற அருட் செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராசாவின் அருமைச் சகோதரரும் செல்வராஜியின் பெரிய தகப்பனும் மேரி றெஜில்டாவின் மாமனும் றெனூஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அடைக்கல நாயகி சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை. (59664)

தகவல்: நிறஞ்சன் (மகன்).

### திருமதி செல்வதேவி பத்மநாதன்



உடுப்பிட்டி, இலக்கணாவத்தையை பிறப்பிடமாகவும் கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதேவி பத்மநாதன் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசப்பெருமான் - விசியம்மா தம்பதியரின் அன்பு மகளும் சாதிலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் சேதுநாதன் (அமரர்), சற்குணதேவி (நோர்வே), கோபுநாதன் (அமரர்), பிறேமநாதன் (இந்தியா), சுகிர்தாதேவி, கிருஷ்ணாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கமலநாதன் (நோர்வே), பகவான், பாலகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சிவானி, கவிதாயினி, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே. 4591257. (58157)

தகவல்: சா.பத்மநாதன் (கணவர்).

### அரியமுத்து வெற்றிவேல் (திருஞானம்)



மயிலங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியமுத்து வெற்றிவேல் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலங்காடு, சுன்னாகம். (59669) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வேம்பிராய், மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரபபிள்ளை செல்லம்மா நேற்று 18.12.2006 காலமானார். அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் அருணாசலம், சோமசுந்தரம், கோமதியம்மா (கனடா), சுப்பையா (நகரசபை- சாவகச்சேரி), யுகராசா, வன்னியசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஈஸ்வரி, புவனேஸ்வரி, அசோகபாலன் (கனடா), சரஸ்வதி, சாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் மீசாலை வடக்கில் உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை, வடக்கு, மீசாலை.

தகவல்: பிள்ளைகள்.

### திருமதி இராசரத்தினம் சிவகாமி



மண்டைதீவு தெற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 36, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் சிவகாமி நேற்று (18.12.2006) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி - சின்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, இராசரத்தினம் மற்றும் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகாமலர், காலஞ்சென்ற கணேசபாலன், அன்பரசன் (உதவித் தபால் அதிபர் - யாழ். பிரதம தபால் கந்தோர்), அறிவரசன் (உள்ளூராட்சி உதவியாளர் - வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மல்லாகம்), காலஞ்சென்ற பண்பரசன் ஆகியோரின் பாசமிகு தாயும் இலட்சுமி சங்கர் (சங்கர் மாஸ்ரர்), காலஞ்சென்ற கலாராணி, பொற்குணவதனா (உபதபால் அதிபர், மண்டைதீவு), சுதர்ஜினி (ஆசிரியை, யா/ அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் மாமியும் சரண்ணியா (மாணவி, யா/ இந்து மகளிர் கல்லூரி), திலக்ஷி (மாணவி, யா/ வேம்படி உயர் தர பாடசாலை), நிகேதா, மிதுசிகன், தமிழ்ப்பிரியா, கவிப்பிரியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 36, சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி.

தகவல்: இ. அன்பரசன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா ஆலய பரிபாலன சபையின் தலைவர்

அமரர்
**ஜோன்பிலிப் அலோசியஸ்**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித அமலோற்பவ மாதா பரிபாலன சபை,
ஒட்டகப்புலம்.

(59671)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆங்கில ஆசிரிய மாணவி செல்வி.க.அமுதா அவர்களின் அன்புத் தந்தை குமாரசிங்கம் கருணாகரசிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆங்கில மன்றம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

(சி.51596)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் வி.ரவிமோகனின் அன்புத் தந்தை

**இரத்தினம் விஜயரெத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

PC Park
நண்பர்கள்.

(59673)

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தின் நிர்வாகசபை உறுப்பினர்

**ஜோன்பிலிப் அலோசியஸ்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

புனித அமலோற்பவ மாதா
சமூக அபிவிருத்தி மன்றம்,
ஒட்டகப்புலம்.

(59672)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூசைப்பிள்ளை அக்கினேஸ்

பிடாரி கோயிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், 118, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை அக்கினேஸ் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் ராஜதுரை விக்டோரியா, றெஜினோல்ட் தேவயோகம், யேசுதாசன், சௌவுந்தரநாதன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

118, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 9107.

தகவல்:
அ.அ.றெஜினோல்ட்
(மருமகன் - இலங்கை வங்கி மேற்நரக் கிளை, யாழ்ப்பாணம்).

### தம்பிப்பிள்ளை நடராசா (பெரிய தம்பி)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நடராசா (பெரியதம்பிப்பத்தர்) நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் கணவரும் சச்சிதானந்தம் (இலங்கை வங்கி - ஊர்காவற்றுறை), ரி.என். ராஜா (கூ. அபிவிருத்தி அலுவலர் யாழ்.), இரதிதேவி, ஸ்ரீதரன் (ஜேர்மனி), நகுலேசன் (நகுல்) ஆகியோரின் தந்தையும் திருமதி கிருஸ்ணகுமாரி, திருமதி இரத்தினேஸ்வரி (மானிப்பாய் பிரதேச சபை), இ. கிருஸ்ணராஜா, திருமதி சியாமளா (ஜேர்மனி), வினோதா ஆகியோரின் மாமனும் தர்சிகா, கோபிநாத், பானுரேகா, அருண்ஜன், அனுராகவன், நிருஜன், சாருஜன், சஜிதன், ஆதவன், பூங்குழலி, மலர்விழி, ஜெனுஜன், அம்சா ஆகியோரின் பேரனும் அக்சயா, அபினயா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்களுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4, கேசாவில் பிள்ளையார் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
[illegible]

தகவல்:
பிள்ளைகள்.

## சபிண்டீகரண அழைப்பு

கடந்த 20.11.2006 (திங்கட்கிழமை) அன்று கொழும்பில் சிவபதம் அடைந்த எமது குலவிளக்கு

**திருமதி சண்முகநாதன் சிவபாக்கியம்**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும் 20.12.2006 புதன்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

ச.கோகுலராசா (மகன்),
5ஆம் வட்டாரம், நயினாதீவு. (59662)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னையா செல்வம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா செல்வம் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரமலர், றஞ்சினி, ஜெயந்தினி, சிவரூபன், காந்தரூபன், மாலினி, றஜனி, மதி வதனி, றாஜினி, சிவாஜினி, விஜோஜினி ஆகியோரின் அன்புத் தாயும் பரமநாயகம், பத்மநாதன், கதிரமலை, கமலக்சுமி, சிவகாமி, ரவி, சூரியகுமார், சதீஸ்குமார், சுவி, தவேந்திரன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளம் லேன், கொட்டடி.

தகவல்: காந்தரூபன் (ரகு மகன்).

### திருமதி பொன்னையா நாகம்மா



வேலணை மேற்கைப்பிறப்பிடமாகவும் மன்னார் திருக்கேதீஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற க.பொன்னையா ஆசாரியாரின் அன்பு மனைவி நாகம்மா நேற்று (18.12.2006) மன்னாரில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை மன்னார் உப்புக்குளத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(59665)

230, சட்டநாதர் வீதி, நல்லூர்.

தகவல்: அரியரத்தினம் (மகன்).

### பரிமளகாந்தி சிவபாலசிங்கம் (காந்தி)



நந்தாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரிமளகாந்தி சிவபாலசிங்கம் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அன்னரத்தினம் நடராசா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் இளைப்பாறிய தபாலதிபர் தம்பு சிவபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் சுபத்திராதேவி, சியாமளாதேவி (ஜேர்மனி), றமணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் பாலமுரளி (லண்டன்), சகித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் யாழினி (லண்டன்), நிமலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் திசான் (லண்டன்), பிரணுஷன் (லண்டன்), கிருபி (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

தகவல்: T.சிவபாலசிங்கம் (கணவர்).

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. (59663)

### இரத்தினம் விஜயரெத்தினம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர்- இலங்கைவங்கி)



நயினாதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இல 837, காங்கேசன்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் விஜயரெத்தினம் நேற்று (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நயினாதீவு 4 வட்டாரம் இரத்தினம் - பரமரெத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் குரும்பசிட்டி வைரமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஜெயஹரி (விவசாய பீடம், 3ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), ரவிமோகன் (முகாமைத்துவ பீடம், 4ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.ஜெயரெத்தினம் (லண்டன்), இரத்தினேஸ்வரி (கொழும்பு), ஐவகரெத்தினம் (கணக்காளர், லண்டன்), கோபாலரெத்தினம் (லண்டன்), இரத்தினாம்பிகை (கனடா), இரத்தினாதேவி (லண்டன்), ஆகியோரின் அன்புச்சகோதரனும் செல்வரெத்தினம் (வர்த்தகர், கொழும்பு), கனகரெத்தினம் (வர்த்தகர், கொழும்பு), நவரெத்தினம் (கனடா), செல்வராணி (கனடா), சந்திராதேவி (இந்தியா), இந்திராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.837, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (59673)

தகவல்: திருமதி பரமேஸ்வரி (மனைவி).

### ஜோன் பிலிப் அலோசியஸ் (லிகிதர் ஆயர் இல்லம், யாழ்.)



ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் பிலிப் அலோசியஸ் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன்பிலிப் (மலேசியன் பென்சனியர்)- லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிலிப்பையா பொன்னுத்துரை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிறோஸ் இலங்காவதியின் அன்புக் கணவரும் பொனேஷ்லெபோன் (World vision), கனீசியஸ் (Plenty food marketing pvt Ltd) அருட்சகோதரன் அன்ரோ டெனீசியஸ் (புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி - கொழும்புத்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனி றொசாறியோ (கனடா), நீற்றா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரெவினி (கனடா), செறோன் (கனடா), சொபியா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் மொனி (கனடா), கிறஸ்ட் (கனடா) ஆகியோரின் மாமனும் பத்திநாதர் (மல்லாவி), கருணைநாதன், விமலா, இந்திரா (பிரான்ஸ்), அரியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 19.12.2006 பிற்பகல் 2.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொசேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

243, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை.பேசி:2223302.

தகவல்: மேரிறோஸ் இலங்காவதி (மனைவி).
(59679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்து




திரு. திருமதி கௌரிஹரசன் - சர்மிளா
தம்பதியரின் புதல்வர்களான
**ஆர்த்திகன் அக்ஷயன்**

தங்களது முதலாவது, 3ஆவது பிறந்த நாள்களை
இன்று [19.12.2006] செவ்வாய்க்கிழமை
தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.
இவர்களை பெற்றோர், உற்றார், உறவினர் அனைவரும்
வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துபவர்: மாமா
(சபேசன் - லண்டன்).




… நிதியில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி பெருந்திரு விழா … திர் வரும் வெள் … கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு இரதோற்சவமும் மறு நாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## மணற்காடு, குடத்தனை மற்றும் பொற்பதி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மீன் ஏலவிற்பனை நிலையக் கட்டடம்

UNDP

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் மணற்காடு, குடத்தனை மற்றும் பொற்பதி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மீன் ஏலவிற்பனை நிலையக் கட்டடம் அமைப்பதற்காக ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூபா 953,000.00 தொகை அனுமதிக்கப்பட்டு முதற்கட்டமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூபா 381,200.00 தொகை 29.11.2005 அன்று வழங்கப்பட்டது.

இன்று வரை கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன் மேற்படி சங்கங்களின் நிர்வாக அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதும் அறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்படி திட்டங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருவதுடன் முதற்கட்டமாக வழங்கப்பட்ட தொகையை இவ்வறித்தல் விடுக்கப்பட்ட திகதியில் இருந்து 10 நாள்களுக்குள் மீளளிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## விற்பனைக்கு

புத்தம் புதிய மாருதி கார் 800 AC உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய இல. 021 2225477
Dr. சுபாஷன்

## தவறிவிட்டது

நர்சிலா இரத்தினம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம், ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், HNB Card, Jaffna University நூலக Card என்பன அடங்கிய பச்சை நிற பேர்ஸ் 15.12.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V.T.S.லேன் உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் என்ற முகரியுடனோ அல்லது 7550 எனும் தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**அல்பிரட் ஸாஸ்ஸ்**

அன்னை மடியில் 21 ★ 04 ★ 1990
இறைவன் அடியில் 05 ★ 11 ★ 2006

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்பு மகன் அல்பிரட் ஸாஸ்ஸ் 05.11.2006 ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறையில் அகாலமரணமான செய்தி கேட்டு அவரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி, தொலைநகல், துண்டுப் பிரசுரம், பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன்பின் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பிலிப்பன் எஸ்தோப்பர்
பழைய பொலீஸ் ஸ்ரேசன் வீதி,
ஊர்காவற்றுறை. (58189)

நெஞ்சம் நெகிழ்ந்துருகும் அல்பிரட்
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.

# 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **J.S.தம்பித்துரை**
(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

தோற்றம் 10 - 10 - 1910 மறைவு 19- 12 - 1985

சொந்தமெல்லாம் மறந்திங்கு
சொர்க்கம் சென்று வாழ்ந்தாலும்
நித்தம் உங்கள் நினைவுடனே
நாமிங்கு வாழ்ந்திருப்போம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

வண். வட மேற்கு,
வண்ணார் பண்ணை.
தகவல்:
த.குலமணி (மனைவி)
ஆனைக்கோட்டை. (56894)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணியாற்றும் செ.அமிர்தநிரஞ்சன்
அவர்களின் பாசமிகு தந்தை

**செல்லத்துரை செல்வநாயகம்**

அவர்களின் மறைவுச்செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும்,
உத்தியோகத்தர்களும்.
ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி.
(59658)

# மரண அறிவித்தல்கள்

## நயினாதீவு தம்பு கோபாலபிள்ளை



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பு கோபாலபிள்ளை அவர்கள் 18.12.2006 நயினாதீவில் காலமானார். அன்னார் கோகிலாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பு - சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா பொன்னம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெகதீசன்(கனடா), தர்மசீலன்(சுவிஸ்), சத்தியசீலன்(சுவிஸ்), ஆனந்தி(லண்டன்), வசந்தி (ஆசிரியை), கிருபாலினி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயமலர்(கனடா), புஸ்பலதா(இந்தியா), முகுந்தினி, திருமலைநாதன்(லண்டன்), தர்மராஜா, இராசசேகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ருக்குமணி, காலஞ்சென்ற சண்முகரெத்தினம் மற்றும் சோமசுந்தரம், தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, கைலாயபதி, இராசலெட்சுமி, கணேசபதி, ஜெயலட்சுமி, தேவகுமாரி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் துசிக்கா, சுசாந்திகா, தனேகா, தனேசிகா, சஞ்ஜை, ஜனனி, வஜிதா, யதுசன், கோமேசன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு நயினாதீவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோகிலாம்பாள்(மனைவி), வசந்தி(மகள்)

## திருமதி கந்தசாமி தெய்வானைப்பிள்ளை

(வளலாய் மேற்கு)

வளலாய், அச்சுவேலியைச் சொந்த இடமாகக் கொண்டவரும் இறுதியாக இடைக்காட்டில் வசித்தவருமாகிய திருமதி கந்தசாமி தெய்வானைப்பிள்ளை 15.12.2006 வெள்ளிக்கிழமை தனது தொண்ணூறாவது வயதில் சிவபதமடைந்தார்.

அன்னார் தம்பித்து கந்தசாமியின் அன்பு மனைவியும் இராசேஸ்வரி கந்தசாமி (ஆசிரியை, இடைக்காடு ம.வி.), சிவசுப்பிரமணியம்(ஜேர்மனி), சிவலோகபூபதி, ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி (ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவு அலுவலர்), சிவசுப்பிரமணியம் சகுந்தலா, ஆறுமுகசாமி ஆகியோரின் அன்பு மாமியும் மகாலட்சுமி குமரகுருலிங்கம், விஜயலட்சுமி கருணாமூர்த்தி, கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் முறைமாமியும் பாசமிகு வளர்ப்புத் தாயும் குமரகுருலிங்கம் கமலாதேவி, நாகராசா ஆகியோரின் அன்புச் சிறியதாயும் கஜமுகன், ரஜீவ், ரதீப், செந்தூரன், பானுகோபன், மகிழினி, வசந்தமாறன், சுகந்தமாறன், தனுஜா, பிரணவன், பானுஜா, அசோகன், அனுஜன், அஜந்தாமன், தர்சிகன், மதன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் துர்க்கா, தாருகா, அஞ்ஞனன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2006 சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இடைக்காடு. இராசேஸ்வரி(மகள்).

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வேதநாயகம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேதநாயகம் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - ரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் நடராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் ஐங்கரன் (லண்டன்), அமரர் வாசுகி, தமிழரசி (ஜேர்மனி), தமிழினி (பிரான்ஸ்), வேதஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானகாந்தன், விஸ்வநாதன், கிருபானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் பொன்னுத்துரை, சங்கரலிங்கம், சுந்தரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் நிரோஷன், நிறுஷா, விஷுஷா, விஷுஷன், கோபிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.12.2006) நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு. (58187)

தகவல்:
மனோன்மணி
(மனைவி).

## இராசையா நடராசா

(உரிமையாளர் யாழ். முருகன் எலக்ரிக்கல் ஸ்ரோர்ஸ்)



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நடராசா 18.12.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா சின்னார் - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும் நாகேஸ்வரியின் அன்புத் தந்தையும் வளர்மதியின் அன்புப் பெரியப்பாவும் சுதாகரன், ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் மாமனும் ராகுலன், பிரசாத், பவித்திரா, சமித்திரா, அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.12.2006)செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.சுதாகரன்,
K.ஸ்ரீரங்கநாதன்
(அரவிந் விடியோ).

326, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (59652)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 12 - 1950



மறைவு 30 - 12 - 2004

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை**

*தெய்வமே!*
*ஆண்டுகள் பல சென்றாலும்*
*உம்மை நாம் மறவோம்*

இன்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*பேக்கரி ஒழுங்கை,*
*கண்டி வீதி, நாவற்குழி.* (58159)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 ✱ 07 ✱ 1926



இறைவனின் அடியில் 19 ✱ 11 ✱ 2006

அமரர் **விநாசித்தம்பி வைத்திலிங்கம்**

(ஓய்வுபெற்ற பிரதம கணக்குப் பரிசோதகர், யாழ். மாநகர சபை, ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், மூதூர்)

வந்தோம் வாழ்ந்தோம் சென்றோமென்றிங்கு
போவோர் பலரிருக்க
வாழ்வோர் நெஞ்சமெல்லாம்
வாழ்ந்திடுவோர் சிலரிருப்பார்
சொந்த உறவுமுறை
சொல்லியழவென்று சுற்றம் பலரிருக்க
சொந்தமில்லா உள்ளங்களுக்கும்
சுற்றியழ வாழ்ந்தார் சிலரிருப்பார்
அந்தவகையில் உமைத் தந்தையாய் பெற்றதற்கு
ஆயிரந் தவங்கள் செய்தோம்.

291, அரசடி வீதி,
கந்தர்மடம், நல்லூர். (56859)

மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "துளிர்கள்" நிறுவனத்திற்கு கணனி உத்தியோகத்தர் தேவை

✱ *தகைமை :* க.பொ.த. சாதாரண தரம், கணனி தட்டச்சு வேலையில் முழுமையான அனுபவம், ஆங்கில அறிவு.

அறிக்கைகளைத் தானே தொகுத்து எழுதும் ஆற்றல் இருத் தல் வேண்டும்.

✱ விண்ணப்பங்கள் 28.12.2006 இற்கு முன்பு இருபாலரும் அனுப்பிவைக்கலாம்.

இயக்குநர்.
*துளிர்கள், 47, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.*
(581693)

## ஈராண்டு நிறைவின் ஈரவிழி நினைவுகளில்...

*மலராக* 21 * 10 * 1991



*சருகாக* 19 * 12 * 2004

### செல்வி தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி

(யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மாணவி)

மலர்ந்து மணம் பரப்ப முன்
மலர் முகமே மறைந்து விட்டாய் நாம் தவிக்க - நின்
பூ முகத்திற்கு பூச்சூடிப் பார்க்க முன்
பூவுலகில் எமை விட்டு புகுந்தாயோ விண்ணுலகு
ஈராண்டாகியும் எம் ஈரவிழி காயவில்லை
ஈவிலின் நின் நினைவுகளால்........

நின் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா, தம்பி.

பழைய பொலீஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு. (58166)
*தகவல்:* பொ.தபேந்திரராஜா (தந்தை).

## முதலாவது வருட நினைவஞ்சலி

மலர்வு 28 ★ 09 ★ 1928



உதிர்வு 29 ★ 12 ★ 2005

### அமரர் முனியையாபிள்ளை செல்லத்துரை

திதி: சதுர்த்தசி

*ஓராண்டும் ஆயிற்றோ! ஐயா உமைப்பிரிந்து*
*உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல் இனி வருமா?*
*அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி*
*எம்மை வாழவைத்த தெய்வமே! உங்கள்*
*திருமுகத்தை இனி எப்போது காண்போமையா?*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

(58850)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

57/37, திருமகள் வீதி,
அரியாலை.

## 72, 31 ஆம் நாள் நிகழ்வும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 12.02.1976
மறைவு 08.10.2006



தோற்றம் 06.01.1942
மறைவு 20.11.2006

**விஸ்வலிங்கம் முகுந்தன்**
(கனடா - ரொரன்ரோ)
இயந்திர தொழில்நுட்ப போதனாசிரியர்,
மணி மோட்டோர்ஸ் தொழில்நுட்ப நிறுவனம்)

**கனகரத்தினம் விஸ்வலிங்கம்**
(ஓய்வுபெற்ற இயந்திர தொழில்நுட்ப மேற்பார்வையாளர்,
யாழ். மாநகர சபை, உரிமையாளர், மணி மோட்டோர்ஸ்
தொழில்நுட்ப நிறுவனம், புகழ்பெற்ற இயந்திரத் திருத்துநர்)

(மொக்கறாவத்தை, ஊரிக்காடு)

புகழ் பெற்ற இயந்திர தொழில்நுட்ப வல்லுநராய்
புவியதிலே இணைந்திருந்து பணி செய்த
எம் வீட்டு குலத்தலைவா, குல விளக்கே!
எமை இங்கு தவிக்கவிட்டு சென்றீரே
எமக்கிங்கு ஆறுதல் தர யாருளர்
எங்கள் செல்வங்களே இறையடி வாழுங்கள்.

நாளை (20.12.2006) புதன்கிழமை எமதில்லத்தில் அன்னார்களின் நினைவாக அதிகாலை நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகளிலும் மதியம் 12 மணியளவில் இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னார்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். (58152)

மொக்கறாவத்தை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
தகவல்: திருமதி பாலாமணி விஸ்வலிங்கம் குடும்பத்தினர்.

## சிக்குன் குனியா மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற் பாட்டில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கச் சேரி -நல்லூர் வீதியிலுள்ள ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் சிக்குன் குனியா விசட மருத் துவ முகாம் நடைபெறவுள்ளது. (202)

## மருந்து வகைகளைப் பெறலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

சுகாதாரத் திணைக்களத்தில் கடந்த 8ஆம் திகதி வரை பதிவுசெய்த நோயாளர்களுக் கான மருந்துகள் வந்துசேர்ந்துள்ளன. அவற்றை அலுவலக நேரத்தில் யாழ். ஆஸ்பத்திரி வீதி யில் உள்ள பிரதி மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதி மாகாணப் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (1-202)

## தவறிவிட்டது

இராச வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த இராசேந்திரன் சர் வேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன போர்சுடன் அங்கிலிப்பாய், இணுவில் கிழக்கிற்கும் இராச வீதிக்கும் இடையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் இ.ஏகாம்பரநாதன் அங்கிலிப்பாய், இணுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (56949)

## தவறிவிட்டது

12.12.2006 திருகோணமலை - யாழ்ப்பாணம் கப்பல் பயணத்தின்போது 3 அல்பங்கள் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 021 226 3937 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவுங்கள்.

எ.என்.ஜேசுரட்ணம்
சென்.தோமஸ் லேன், பருத்தித்துறை.


## ICT Information & Communication Technology

**Grade - 10 - 11 (2007)**

2007 ஆம் ஆண்டு தரம் 10.11ல் கணினியை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கான விசேட கணினிப்பிரிவுகள் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

**CB Computer Academy**
T.P No 021-4590291 Station Road, Kondavil.

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

*தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின் றது. உடனடிப் பயணம்.*

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(சி/50463)


## 47 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 ✱ 09 ✱ 1989



உதிர்வு 03 ✱ 11 ✱ 2006

### செல்வி கபிலா இராஜலிங்கம்

பாசம் வைத்த உன் முகம்
பாதியில் மறைந்ததேனோ?
நேசம் வைத்து உன் நெஞ்சம்
கல்லாகிப் போனதேனோ?
வாழ்க்கை பிடிக்கவில்லை என்றா
நீ - உன் பாதி வாழ்வை முடித்தாயோ
உன்னுடன் வாழ்ந்த காலங்களை
நினைவு கூரும் உன் அன்புள்ள இனிய நெஞ்சங்கள்.

இன்று (19.12.2006) செவ்வாய்க்கிழமை அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தமிழ்ப்பாடசாலை அருகில்,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (58175)
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நன்னித்தம்பி கந்தையா ஈஸ்வரலிங்கம்

(ஓய்வுபெற்ற யாழ். மாநகர சபை - மேற்பார்வை உத்தியோகத்தர்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி கந்தையா ஈஸ் வரலிங்கம் 15.12.2006 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் இளையமகனும் காலஞ் சென்ற S.S.நவரட்ணம் (முன்னாள் யாழ். மாநகர முதல்வர்) - மதியாபரணம் தம்பதியரின் மருமக னும் சத்தியலட்சுமியின் அன்புக் கணவரும் சத்திய பிரபா (ஆசிரியர்/ திருக்குடும்ப கன்னியர்மடம்), மதியழகன் (கனடா), அறிவழகன் (பிரான்ஸ்), சாந்தபிரபா (ஆசிரியர் - கண்டி), ஸ்ரீபிரபா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார் (ஆசிரியர் யா/ வேம்படி மகளிர் கல்லூரி), குமுதினி (பொறியியலாளர் - கனடா), ஜனனி (கண்டி), அருள்ராஜா (பொறியியலாளர் - கண்டி), சித்தார்த்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அமிர்தநாயகி அம்மா (ஜேர்மனி), பாலசிங்கம், ஆனந்தராஜா (கனடா), காலஞ்சென்ற அரசக்கோண் ஆகி யோரின் அன்புச் சகோதரரும் லட்சுமிகாந்தன் (லண்டன்), சிறினிவாசன் (பிரான்ஸ்), குணாலன் (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்), சிவநேசன் (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்ற சிவபாலன், சிவானந்தன் (பிரான்ஸ்), சத்தியசீலன், சாவித்திரி, சத்தியசிவசொரூபினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மேந்திரா, நிவேதினி, சஞ்சீவன், ஜெயஜீவன் ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2006) புதன்கிழமை முற்பகல்10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கந்தரோடை, சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

23/24, கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (58185)
*தகவல்:* மனைவி, மக்கள், மருமக்கள்.


## காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம் (இந்தியா) தொலைதூரக்கல்வி கற்பதற்கான ஓர் பொன்னான வாய்ப்பு

சேவா லங்கா மன்றம் காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகத்துடன் (காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம், காந்திக்கிராம் - 624302, திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா.) இணைந்து இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. விருப்பமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இங்கு இரண்டு பிரிவுகள் உள்ளன.

1. Regular Programme (Group A)
2. Diploma in Certificate Programme (Group B)

Regular Programme, இப் பல்கலைக்கழகத்தில் 2007ம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பிக்கவுள்ளது. தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2007ம் ஆண்டு தை மாதம் இந்தியா செல்ல முடியும். Diploma in Certificate Programme பயில விரும்புபவர்கள் ஒன்று அல்லது இரண்டு பாடநெறிகளை கற்க முடியும்.

**GROUP(A): REGULAR PROGRAMMES**

| Courses | Yrs | Courses | Yrs |
|---|---|---|---|
| Dip. In Agriculture | 2 | B.Tech. Habitat Engineering | 4 |
| PG Dip.In Seed Production | 1 | B.Tech.Sustainable Technology and Rual Industries | 4 |
| M.Sc.Diary Science | 2 | MBA Disaster Management | 2 |
| M.Sc.Medicinal Plants | 2 | MA Sociology | 2 |
| MA English & Communicative Studies | 2 | M.Phil.Development Sociology | 1 |
| M.Phil.English&CommunicativeStudies | 1 | MBA Small Business Management | 2 |
| B.Sc. /M.Sc.Physics | 3/2 | MBA Rural Industries Management | 2 |
| B.Sc/M.Sc Chemistry | 3/2 | BBA Rural Industries &Management | 3 |
| B.Sc Maths | 3 | MA Development Administration(for A/L Passed) | 5 |
| M.Sc Tech.(Industrial Maths with Comp. Applications) | 3 | BA Gandhian Social Work | 3 |
| M.Sc Extension &Community Development | 2 | MA Human Resource& Conflict Management | 2 |
| B.Sc Homescience | 3 | B.Com.Cooperation | 3 |
| M.Sc Food Science&Nutrition | 2 | M.Sc Geo Informatics | 2 |
| MCA(Master in Computer Applications) | 3 | M.Phil. Micro-Level Planning | 1 |
| M.Sc Information Technology | 2 | MBA Rural Project Management | 2 |

**GROUP(B): ADD-ON PROGRAMMES(3-6MONTHS)**

| | |
|---|---|
| Medical Lab Technology | Dip.in Human Rights* |
| Cert.in English Communication(Advanced) | Dip.in Entreprenesurship* |
| Dip.in English Communications Skills | Dip.in Garment Technology |
| Dip.in Biological Technologies | Dip.in Natural Dyes |
| Cert.in Multimedia | Dip.in Project Planning |
| Dip.in Fruit Processing | Dip.in Training and Development |
| Dip.in Bakery&Confectionary | Dip.in Journalism |
| Dip .in Cost Effective Construction Technology | Dip.in Mass Communication |

விண்ணப்பப்படிவங்களை இலங்கையிலுள்ள சேவா லங்கா மாவட்ட காரியாலயங்களில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 24.12.2006. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு தை மாதம் 2007ம் ஆண்டு 3ம், 4ம் கிழமைகளில் கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும்.

E-mail : gandhigram@sewalanka.org
Website : www.gru.sewalanka.org
Tel : 0602166333, 0602166334, 0602166335


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# உலை வாயை மூடினாலும்....!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, பொதுமக்களின் மனித உரிமைகள் மீறப்படமாட்டாது. இவ்வாறு உறுதி அளித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீதிச் சேவை அதிகாரிகள் சங்கத்தினரும் பிரதம நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தினரும் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர். அப்போதே இந்த உறுதி மொழி தரப்பட்டிருக்கிறது:

இம்மாத முற்பகுதியில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதச் சட்டத்திற்கெனத் துணைவிதிகள் ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்டன. அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் திருவாய் மலர்ந்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டமானாலும் சரி, அதற்குக் கொண்டுவரப்படும் துணை விதிகளானாலும் சரி, அவை மனித உரிமைகளை மீறுவதற்கு மறைமுகமாக உதவுபவை என்ற கருத்தே பொதுவாக மக்கள் மத்தியில் நிலவுகிறது. அதனால் பாதிப்புறாத ஒரு சில வீதத்தினரை விட.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை - அதன் விதிமுறைகளை - நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் பொறுப்பும் முப்படையினருக்கும் பொலீஸாருக்குமே வழங்கப்படுகிறது. எனவே அவற்றைச் செயற்படுத்தும்போது மனித உரிமைகளை மனதிற்கொண்டு அவற்றைப் பேணியவாறே அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று இலங்கையில் எதிர்பார்ப்பது எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்ட கதைதான்!

சாதாரண சிவில் சட்டங்களுடன் தொடர்புடைய அலுவல்களை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதே, பொலீஸாரும் படையினரும் எவ்வாறு தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு முரணாகவும் அவற்றை மீறியும் செயற்படுகிறார்கள் என்பது சாதாரண பிரஜைகளுக்கும் தெரியும். அவர்களில் ஒவ்வொருவரையும் கேட்டால் அல்லது உத்தியோகப்பற்றற்ற முறையில் விசாரித்தால் கதை கதையாகச் சொல்லுவார்கள்! இது இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு ஒன்றும் தெரியாதது அல்ல. மூடிமறைக்கக் கூடியதும் அல்ல.

இலங்கைப் பொலீஸார் மற்றும் படையினரின் அதிகார துஷ்பிரயோகத்தின் லட்சணத்தில், பயங்காரவாதத் தடைச் சட்ட விதிகள் நடைமுறை செய்யப்படும்போது பொதுமக்களின் மனித உரிமைகள் மீறப்படமாட்டாது என்று ஜனாதிபதி என்ன, கடவுளே நேரில் வந்து உறுதி மொழி வழங்கினாலும் இந்நாட்டு மக்கள் நம்பப்போவதில்லை. மிகக் குறிப்பாகத் தமிழ்மக்கள் இத்தகைய உறுதிமொழிகளைக் காதில் போட்டுக்கொள்ளவே மாட்டார்கள்.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் எத்தகைய கொடிய பற்களைக் கொண்டிருக்கிறது. அது மக்களின் மனித உரிமைகளை மட்டுமன்றி மனிதனாக வாழும் உரிமைகளையும் பறிப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு வசதி செய்து வழங்குகிறது என்று நீண்ட நெடுங்காலமாக - கடந்த முப்பது வருடங்களாக - அனுபவித்ததில் கண்டவர்கள் தமிழ்மக்கள். சிங்கள மக்களுக்கு இந்த அனுபவம் ஒப்பீட்டள வில் மிகச் சிறிது; எள்ளளவு என்றே கூறலாம்.

எழுபதுகளின் பிற்பகுதியில் நவாலியைச் சேர்ந்த இன்பம், செல்வம் ஆகியோரில் தொடங்கி, செம்மணியில் கிருஷாந்தி என்று உயர்ந்துகொண்டே சென்று, இன்று அளவிட்டுக் கூறமுடியாத கொலைகள் உட்பட மனித உரிமை மீறல்கள் தமிழ்ப்பிரதேசங்களில் வரம்பு மீறிய அளவுக்கு வழிந்தோடுகின்றன.

இத்தகைய பின்னணியில், பயங்கவரவாதத் தடைச் சட்டத்தை மேலும் பலமாக்கி, வலுப்படுத்தி, ஒன்றுக்குப் பல தடவைகள் தீட்டி தீட்டிக் கூராக்கிய பின்னர், அது மனித உரிமைகளை மீறாத வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறுவது மக்களை - அதனால் பாதிப்புற்றவர்களான தமிழர்களை - முட்டாள்களாக்க முனையும் அபத்தம் நிறைந்த ஒன்றாகும்.

ஆனாலும் பயங்கரவாதச் சட்டத் துணைவிதிகளை அவசர அவசரமாக அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் ஜனாதிபதிக்கோ துணை விதிகள் மனித உரிமைகளை மீறாத விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதியளிக்கவேண்டிய தேவை உண்டு!

ஏனெனில் -

ஐ.நா. மனித உரிமை சாசனத்துக்கும் ஏனைய சர்வதேச விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கும் முரணாக மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் இலங்கை உலகத்திலேயே முன்னணி வகிக்கிறது. அந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் ஒன்றை இலங்கை வெகு 'சுலபமாகப்' பிடித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப்பிந்திய அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகள் மிகப் பாரதூரமாக மீறப்படுவது குறித்தே முக்கியத்துவமும் முதன்மைத்துவமும் கொடுத்து விவரிக்கப்பட்டிருக்கிறது.

* வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு போதுமான அளவில் உணவுப் பொருள்கள் கிடைக்காமை.
* இந்த ஆண்டில் மட்டும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.
* அரசியல் படுகொலைகள் மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்கள் மிக அதிக அளவில் இடம்பெற்றுவருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு இலங்கையில் என்னென்ன விதங்களில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதை மிக நீண்ட பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை சர்வதேசமும், மனித உரிமை அமைப்புக்களும் விழிகளை அகலத் திறந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கடந்த நவம்பர் 27ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணைகளைக் கொண்டுவர இருந்த ஐரோப்பிய ஒன்றியத்திடம், கால அவகாசம் கேட்டு அரசு, தப்பிக்கொண்டது குறித்து முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இத்தகைய சூழ்நிலையில் மனித உரிமைகள் மீறப்படமாட்டாது என்று அடிக்கடி கூறிக்கொண்டிருக்கவேண்டிய தேவை ஒன்று மஹிந்த அரசுக்கு உண்டு.

உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட இயலாது என்பது சந்திரிகா விடயத்தில் உண்மையாகி இருப்பது ஒரு பாடமாக அமைந்திருக்கிறது.

முந்திய காலங்களைப் போன்று, சர்வதேசத்திடம் இருந்து எதனையும் மூடிமறைக்க முடியாது என்பதனையும் கால அவகாசம் வழங்க இயலாது என்பதனையும் இலங்கை அரசும் அதன் ஆட்சியாளர்களும் உணர்ந்து தங்களைத் திருத்திக் கொள்வது எப்போது?

அரசாங்க வைத்தியசாலைகளில் மட்டும்

# 'சிக்குன்குனியா' வைரஸ் காய்ச்சலுக்கு 30 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றனர்

## எனினும் தற்போது ஓரளவு கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம்,டிசெ.19

குடாநாட்டில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை 'சிக்குன்குனியா' காய்ச்சலால் பீடிக்கப்பட்டு அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

எனினும், அந்த நோய் இப்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இத்தகவலை உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 38 வைத்தியசாலைகளில் மட்டும் இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிக்குன்குனியாவினால் பீடிக்கப்பட்டுச் சிகச்சை பெற்றுள்ளனர்.

அவர்களை விட தனியார் வைத்தியசாலைகளிலும் பெருமளவானோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களை விட சிலர் தாமே வீடுகளில் இருந்து மருந்துகளைப் பாவித்து வருகின்றனர். இவர்களின் எண்ணிக்கையை எம்மால் பெறமுடியவில்லை.

சிக்குன்குனியா இப்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மழை இல்லாமை இந்த நோய் குறைவடைந்தமைக்குப் பிரதான காரணம் எனலாம்.

இந்த நோய்க்குத் தேவையான அளவு மருந்து தற்போது எம்மிடம் கையிருப்பில் உள்ளது. எல்லா அரச வைத்தியசாலைகளுக்கும் இந்த மருந்துகள் தேவையான அளவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடுத்துவரவுள்ள கப்பலிலும் மேலும் மருந்து வகைகள் எடுத்துவரப்படவுள்ளன - என்றார்.(1-8)

# நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்களில் மக்கள் அக்கறைகாட்டவில்லை

## பொருள்களுக்கான தட்டுப்பாட்டால் கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.19

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் நத்தார், புதுவருடக் கொண்டாட்டம் குறித்து மக்கள் ஈடுபாடோ அக்கறையோ காட்டவில்லை.

அத்தியாவசியப் பொருள்களுக்குக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்களில் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்ட வில்லை.

இதனால், யாழ். நகருக்கு பொருள்கள் வாங்குவதற்கு வரும் மக்களின் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு நியாய விலையில் தேவையான பொருள்களை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-79)

# கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தரை ஏதுவித ஈனமும் இன்றி விடுவிக்கவும்

## யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் கோருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.19

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி சுப்பிரமணியம் ரவீந்திரநாத்தை எதுவித ஈனமும் இன்றி விடுவிக்க வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி சுப்பிரமணியம் ரவீந்திரநாத்தை கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட செய்தியை அறிந்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. உயர்ந்த பாதுகாப்பு வலயத்தில் இத்தகையதொரு நிகழ்வு இடம்பெற்றது கண்டனத்திற்கும் கவலைக்கும் உரியதாகும்.

எனவே அவரைக் கடத்தியவர்கள் அவருக்கு எதுவித ஈனமும் ஏற்படாத வகையில் விடுதலை செய்யுமாறு கோருவதுடன் அரசையும் இது குறித்து உரிய கவனத்தை உடனெடுத்து ஆவண செய்யுமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகிறது - என்றுள்ளது.(1)

# பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

நாவாந்துறை தெற்கு (ஜே/84), நாவாந்துறை வடக்கு (ஜே/85) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசால்ல மண்டபத்திலும் -

சிறாம்பியடி (ஜே/79), பெரியகடை (ஜே/80) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் ஹோல் மண்டபத்திலும் - மீளாய்வு இடம்பெறும்.

நெடுங்குளம் (ஜே/61), கொழும்புத்துறை கிழக்கு (ஜே/62), கொழும்புத்துறை மேற்கு (ஜே/63) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9மணிக்கு கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மண்டபத்தில் பங்கீட்டு அட்டைகளின் மீளாய்வு இடம்பெறும்.(202)

# உற்பத்திப் பொருள்களை நியாய விலைக்கு விற்பனை செய்ய அரச அதிபர் அறிவுறுத்து

குடாநாட்டில் விளைபொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்யவேண்டும்.

அரச அதிபர் கே.கணேஷ் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

விவசாயம், மீன்பிடி, கால்நடை போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆகவே தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் நியாயமான இலாபத்தைப் பெறக் கூடிய வகையில் தமது உற் பத்திப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும்.

அன்றாடம் தொழில் செய்து வாழும் மக்கள் தமது வாழ்வைச் சீராக மேற்கொள்ள உதவியாக உற்பத்திப் பொருள்களை அவர்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள வசதியாக - உற்பத்திப் பொருள்களை நியாய விலைக்கு விற்பனை செய்து உதவ வேண்டும் - என்றார் அரச அதிபர்.

விளை பொருள்களை நியாயமான விலையில் விற்பனை செய்யாவிட்டால் அவற்றுக்கு விலைநிர்ணயம் கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் நீண்ட நாள்களாக வைக்கப்பட்டுள்ள ஆண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸார் கோரியுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் மீட்கப்பட்ட சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் நீல நிற ரீசேட்டும் நீலச் சாரமும் அணிந்து காணப்படுகின்றது.

# கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் பாதிப்பு

## கடற்கொந்தளிப்பு காரணமாக

யாழ்ப்பாணம்,டிசெ.19

கடற்கொந்தளிப்புக் காரணமாக கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் பாதிப்புற்றுள்ளன.

பருத்தித்துறையில் 'ஜெனி கிளிப்பர்' கப்பல் 700 மெற்றிக்தொன் கோதுமை மாவுடனும் -

காங்கேசன்துறையில் 'றுகுணு' கப்பல் 3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்களுடனும் - தரித்து நிற்கின்றன.

கடற்கொந்தளிப்புக் காரணமாக இந்தக் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால், பொருள்களை இறக்கும் பணிகள் நேற்று முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிக்கொண்டிருந்த இருபடகுகள் கடற்கொந்தளிப்பால் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## நாளை

மார்கழி 05
புதன்கிழமை
20.12.2006
திதி : அமாவாசை
முன்னிரவு : 8.21
நட்சத்திரம் : கேட்டை - சித்தம்
பிற்பகல் : 12.10
சுபநேரம் : 04.54 - 06.24
ராகுகாலம் : 12.24 - 01.54

# இன்று மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை ஐயனார் கோயில் வீதியில் உள்ள லங்கா மண்ணெண்ணெய் வழங் கும் நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. (202)

* * *

கோப்பாய்,டிசெ.19

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள ஏ.எம்.ரி. நிறுவனத்தில் பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. (202)

# பேராதனை வெளிவாரிப்பரீட்சை யாழ். பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமுதல் தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் நேற்று திங்கட்கிழமை யாழ் பல்கலைக்கழகத்திலும் ஆரம்பமாகின.

இப்பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட துணைவேந்தரை உடன் விடுவிக்குக - மாணவர் பேரவை

யாழ்ப்பாணம், டிசெ.19

கடத்தப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தரை உடன் விடுவிக்குமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இம்மாதம் 15ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுள்ளார். இக்கடத்தல் சம்பவமானது ஸ்ரீலங்கா அரசின் பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ள கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

தமிழர்களது கல்வியைச் சீரழித்து, தமிழ்க் கல்வியாளர்களையும், புத்திஜீவிகளையும் கடத்தியும் கொலைசெய்தும், அச்சுறுத்தியும் வரும் ஸ்ரீலங்கா அரசு அதனைத் தற்போது விரைவு படுத்தியுள்ளது.

அதில் ஒரு அங்கமாகவே, கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தலைக் கருத முடியும். கடந்த சில வாரங்களாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அதன் பின்னரே அவர் கடத்தப்பட்டுள்ளார். இக்கடத்தலுக்கான முழுப்பொறுப்பையும் ஸ்ரீலங்கா அரசே ஏற்கவேண்டும். அதனைவிடுத்து போலிப்பிரச்சாரங்கள் மூலம் மக்களை ஏமாற்ற முயலக்கூடாது.

அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் அனைத்து கல்விசார் நடவடிக்கைகளையும் திட்டமிட்டு குழப்பி வருகின்ற ஸ்ரீலங்கா அரசு, கல்வியாளர்களைக் கொலை செய்தும் வருகின்றது. யாழ். பல்கலைக்கழகம் தாக்கப்பட்டமை, வவுனியா விவசாய பீட மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கடத்தப்பட்டமை ஆகியவற்றின் தொடர்ச்சியாக துணைவேந்தர் கடத்தப்பட்டுள்ளார். பொய்ப்பிரச்சாரங்களை நிறுத்திவிட்டு கடத்தப்பட்ட துணைவேந்தரை உடன் விடுக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புத்தளத்தில் கைக்குண்டு வீச்சு

புத்தளம், டிச. 19

புத்தளம் நகரின் இரண்டாம் வட்டார மானதில்லையடி என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் வீடொன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதனால், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன. எனினும், எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இக் குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும், இத்தாக்குதலுக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## செங்கலடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட மூவரின் சடலங்கள் சித்தாண்டியிலுள்ள கருணா அணியினரின் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் ஓட்டோ தரிப்பிடத்தில் நின்ற ஓட்டோச் சாரதியொருவரும் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் கோரியுள்ளது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களை தான் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ள சர்வதேச சட்டவியலாளர்கள் ஆணைக்குழு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் பொதுமக்களுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும் என்பதால் அதில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (த-12)

## பனிக்கட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் நீண்ட நேரமாக எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

வள்ளங்களில் சென்று காப்பாற்றுவதற்கு கடும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் வள்ளங்கள் சென்றடைவதற்கு முன்னர் அவர்கள் குளத்தின் பனிப்பாறைகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

நீண்ட நேரமாக அவர்களைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளின் பின்னர் அவர்கள் பனிப்பாறைகளுக்குள் இருந்து நினைவிழந்த - மயங்கிய - உறை நிலையில், மிகவும் விறைத்துப் போன நிலையில் மீட்கப்பட்டனர். இருவரும் சிறுவர் ஆஸ்பத்திரிக்கு விமானம் மூலம் எடுத்துச்சென்று சேர்க்கப்பட்டனர்.

பிருந்தன் முரளிதரன் சம்பவ தினத்தன்றே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போது இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. கிசோபன் அழகேஸ்வரன் (வயது 15) உயிர்காக்கும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். எனினும் ஒரு வாரத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். இவர்கள் இருவரினதும் குடும்பங்கள் 2000 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து கனடாவுக்குக் குடிபெயர்ந்திருந்தன. (அ)

## மலையகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழுங்கடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. தொழிலாளரின் சம்பளப் பிரச்சினைக்கும், எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. எம்மால் எதுவும் செய்ய முடியாது அதை தொழிற்சங்கங்களும், முதலாளிமார் சம்மேளனமும் இணைந்து தீர்த்துக்கொள்ள வேண்டும் என நழுவும் போக்கைக் கொண்டுள்ளது.

தொழில் அமைச்சர், தோட்டத் தொழிலாளரின் சம்பளப் போராட்டம் குறித்து எதுவித அக்கறையும் காட்டாமல் இருக்கின்றார். எனவே, ஜனாதிபதி இது விடயத்தில் நேரடியாகத் தலையிட்டுத் தோட்டத் தொழிலாளரின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென ஜே.வி.பியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுப் போராட்டம் பதின்மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது. ஜே.வி.பி., ஹட்டனில் நடத்தும் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. மலையகத்தின் முக்கிய நகரங்களில் நேற்றும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன. (ஐ)

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

வாகனச் சாரதி மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. காணாமல் போன உபவேந்தர், சமீபகாலமாக அவரது உத்தியோகபூர்வ வாகனத்தில் செல்லவில்லை எனவும் காணாமல்போன தினத்தன்று அவர் உத்தியோகபூர்வ வாகனத்தில் சென்றார் என்றும் விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் 6 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கல்கிஸை பிரதேசத்திற்குப் பொறுப் பான பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (த)

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென தமிழக அரசு, மத்திய அரசைக் கோரியுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கு உலகமெங்கும் கதவுகள் திறந்துள்ளன. தமிழகத்தில் மாத்திரம் சுமார் 10 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவி வரும் தமிழர்களின் அவல நிலை குறித்து காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். இது குறித்து அவர் சாதகமான பதிலை அறிவித்துள்ளார்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வழித்தோன்றல்களான ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு. அதிலிருந்து நாங்கள் விலக மாட்டோம்'' - என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

# ராதிகா குமாரசுவாமிக்கு எதிராக அமெரிக்காவில் பிரசாரங்கள்!

கொழும்பு, டிச. 19

சிறுவர்களும், ஆயுத முரண்பாட்டிற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமியை மீண்டும் அப்பதவியில் நியமிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விசேட சந்திப்பொன்றை அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடத்தியுள்ளார்

நியூயோர்க் சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இலங்கைக்கான ஐ.நாவின் பிரதிநிதி பிரசாத் காரியவசம் விருந்துபசாரம் ஒன்றை வழங்கியுள்ளார். அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்த விருந்துபசாரத்தில் ராதிகா குமாரசுவாமி மற்றும் முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெற்ற இச்சந்திப்பின்போது ராதிகா குமாரசுவாமியை அடுத்த ஐந்து வருடங்களுக்கு சிறுவர்களும், ஆயுத முரண்பாட்டிற்குமான ஐ.நாவின் விசேட பிரதிநிதியாக நியமிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை -

அமெரிக்காவிலுள்ள சில இலங்கை சார்பான அமைப்புகள் அவரை அப்பதவியிலிருந்து விலக்குவதற்கான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. அண்மையில் ஐ.நாவின் சிறப்புத்தூதுவர் அலென் ரொக்கின் கருத்திற்குச் சார்பான கருத்தை ராதிகா குமாரசுவாமி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குறிகாட்டுவான் - தலைமன்னார் இடையே படகுச் சேவை நடத்த நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியுடன் தொடர்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

குறிகாட்டுவானுக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவையை ஆரம்பிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு இத்தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மக்கள் முகங்கொடுத்து வருகின்ற போக்குவரத்துப் பிரச்சினைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான இடையூறுகள் மற்றும் பற்றாக்குறைகள், விவசாய மக்கள் முகங்கொடுத்து வருகின்ற சந்தைப்படுத்தல் தொடர்பிலான வாய்ப்புகளின்மை உட்பட பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் குறிகாட்டுவான் ஊடாக தலைமன்னாருக்கான படகுச் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருகின்றார்.

**பொதுமக்கள் போக்குவரத்து**

இதன் பிரகாரம் மேற்படி படகுச் சேவை ஆரம்பிப்பதன் மூலம் ஒரு நாளைக்கு சுமார் நூறு பயணிகள் வரை போக்குவரத்துகளில் ஈடுபட முடியும். தற்போது போக்குவரத்து வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லவும் அதே நேரம் வெளியிடங்களில் இருந்து குடாநாட்டிற்குள் பிரவேசிக்கவும் இப்படகுச் சேவை பொதுமக்களுக்கு மிகவும் பயன்தரத்தக்கதாக அமையும் என்பதுடன் மிகவும் குறுகிய காலத்திற்குள் பிரயாணங்களை மேற்கொள்ளவும் முடியும்.

அத்துடன் புகையிலை, வெங்காயம், திராட்சை, வாழைக்குலைகள், மாம்பழம், பனை வள உற்பத்திப் பொருள்கள் போன்ற பல்வேறு உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அதே நேரம் குடாநாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தேங்காய், தேங்காய் எண்ணெய், மிளகாய் உட்பட பல சரக்குப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களை குடாநாட்டிற்குள் இலகுவாகக் கொண்டுவரவும் இப்படகுச் சேவை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதுவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பாக உள்ளது - என்றுள்ளது. (அ-1)

## 95 கிலோ வெடிபொருள் மானிப்பாயில் மீட்பு!

கொழும்பு, டிசம்பர் 19

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் 95 கிலோகிராம் நிறையுடைய 'ஜெலிக்னைட்' வெடிபொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் பொது மகன் ஒருவர் கொடுத்த தகவலையடுத்து பாழடைந்த வீடொன்றினுள் இருந்து இந்த ஜெலிக்னைட் குச்சிகள் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (த-04)

## கிழக்கில் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து வெளியேறியுள்ளனர். கடல் வழியாகவும், காட்டுப் பாதை வழியாகவும் பல சிரமங்களிடையே பொது மக்கள் வாகரையிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

வாகரையிலிருந்து புலிகளை வெளியேற்றும் இராணுவத்தின் திட்டம், விடுதலைப் புலிகளை வெளியேற்றும் திட்டமல்ல, அங்கு இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை வெளியேற்றும் திட்டமே.

நாங்கள் எல்லா வகையிலும் எதிர்த்துப் போராடுவோம். ஸ்ரீலங்கா அரசு ஏற்கனவே முழுமையான போரில் இறங்கிவிட்டது. இரு தரப்பும் கடைப்பிடித்தால்தான் போர் நிறுத்தம். எம்மை தாக்குவதற்காக அரசு மேலும் படைகளைக் குவித்தால், நாம் முன் தாக்குதல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனினும், முன்தாக்குதல் நடவடிக்கைகள், தாக்குதல்கள் நடைபெறும் இடங்களில் மட்டுமே செயற் படுத்தப்படும்.'' - இவ்வாறு இளந்திரையன் கூறியிருக் கிறார். (ஐ)

## நாளை துக்கதினம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலமையும், அணுகுமுறையும் இன்று தமிழ் மக்களாகிய எமது பிரச்சினைகளை சர்வதேச ரீதியாக எடுத்தியம்பி நிற்கின்றது. எத்தனையோ கல்விமான்களும், புலமையாளர்களும் தாமும் தமது தனிப்பட்ட வாழ்க்கையும் என்று இருந்துவிட, தனது அனைத்து ஆளுமைகளையும் யாருக்கும் அஞ்சாமல் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகவே இறுதிவரை அர்ப்பணித்தஎங்கள் பிதாமகனின் நினைவுகளை யாழ். குடாநாட்டு மக்களாகிய நாமும் எமது நெஞ்சங்களில் சுமந்து நிற்கின்றோம்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு இடையூறு இல்லாமல் எமது அனைத்து செயற்பாடுகளையும் நாளை புதன்கிழமை நிறுத்தி - அமைதியாக எமது கண்ணீர் காணிக்கைகளை 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்குச் செலுத்துவோம் - என்றுள்ளது. (அ-1)


**"துளிர்கள்" நிறுவனத்தின் உள சமூக கற்கை நெறி**

- உள சமூக மேம்பாடு சான்றிதழ் பயிற்சி நெறி - 2 ஆவது பிரிவு
- தகைமை : க.பொ.த.சாதாரணம், சமூக சேவையில் ஈடுபாடு.
- பயிற்சிக்காலம் :06 மாதங்கள், விரிவுரைகள் சனி, ஞாயிறு நடைபெறும். வாரத்தில் ஒரு நாள் களப்பயிற்சி இடம் பெறும்.
- விண்ணப்பங்கள் 31.12.2006 இற்கு முன்பு இருபாலாரும் அனுப்பி வைக்கலாம்.

இயக்குநர்,
துளிர்கள்,
47, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.

(58194)



**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

**2007 கல்வியாண்டிற்கு**
தரம்:4 முதல் O/L வரை
புதிய பாடத்திட்டம் உடன் அறிமுகம்

தரம் :9.10.11 → MATHS. SCIENCE. ENGLISH வாராந்தம் மீட்டல் இவ்விரண்டு ஆசிரியர்கள் 6 பரீட்சைகள் மதிப்பீடுகள் கணிப்பீடுகள் கையேடுகள் -100

தரம் : 6.7.8 → MATHS. ENGLISH இவ்விரண்டு ஆசிரியர்கள் 6 பரீட்சைகள் மதிப்பீடுகள் கணிப்பீடுகள்

**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர் — இன்றும் அனுமதிகளைப் பெறமுடியும். ஆரியாலை — இன்றும் அனுமதிகளைப் பெறமுடியும்.

தரம்:5..2007 புலமைப்பரிசில் பரீட்சை



**மரண அறிவித்தல்**

**திருமதி பரமேஸ்வரி சிவராசா**

வட்டுக்கோட்டை தென் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.16, மக்கிலியம் வீதி, கொழும்பு - 04 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவராசா நேற்று (18.12.2006) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் சிவராசாவின் அன்பு மனைவியும் அமரர்களான முருகேசு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் செந்தில்குமார் (Maldives), நந்தகுமார் (முகாமையாளர் - H.N.B., திம்பிரிகசாயா) ஆகியோரின் அன்புத் தாயும் பாமதி, நிரஞ்சலா ஆகியோரின் அன்பு மாமியும் அஸ்வினி, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2006) புதன்கிழமை மாலை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.:0112584381.

தகவல்:
நந்தகுமார், (மகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.